**பெல்மதுள்ள பிரதேச சபையின் 2026.05.13 ஆம் திகதி நடைபெற்ற பொது சபைக் கூட்டத்தின் அறிக்கை**

பெல்மதுள்ள பிரதேச சபையின் பொதுச் சபைக் கூட்டம் 2026 ஆம் ஆண்டு மே மாதம் 13 ஆம் திகதி முற்பகல் 10.00 மணிக்கு கௌரவ தலைவர் திரு. எம்.ஜீ.ஏ. தர்மசிறி மாணிபுற அவர்களின் தலைமையில் பிரதேச சபையின் கேட்போர்கூடத்தில் நடைபெற்றது.

இக் கூட்டத்திற்கு கீழ் பெயர் குறிப்பிடப்பட்டு உள்ள கொரவ பிரதேச சபை உறுப்பினர்கள் கலந்துகொண்டனர்.

02. கௌரவ பிரதேச சபை உறுப்பினர் - திரு. எச்.ஜீ. நலின் சேனக மாகம்மன
03. கௌரவ பிரதேச சபை உறுப்பினர் - திரு. ஏ.டி.டப்ளிவ். சோமரத்ன
04. கௌரவ பிரதேச சபை உறுப்பினர் - திரு. கே.டி. ருவன் சானக பியரத்ன
05. கௌரவ பிரதேச சபை உறுப்பினர் - திரு. ஏ.வீ. நிர்மிக தீபால் அபேவர்தன
06. கௌரவ பிரதேச சபை உறுப்பினர் - திரு. கே.ஜீ. சந்திரலால்
07. கௌரவ பிரதேச சபை உறுப்பினர் - திரு. ஆர்.எல். இந்திக கயான் லியனகே
08. கௌரவ பிரதேச சபை உறுப்பினர் - திரு. டி.எம். மஞ்சுல தசநாயக்க
09. கௌரவ பிரதேச சபை உறுப்பினர் - திரு. டப்ளிவ்.ஏ. கயான் புஸ்பகுமார
10. கௌரவ பிரதேச சபை உறுப்பினர் - திரு. கே. சுசன்த்த பிரேமகுமார
11. கௌரவ பிரதேச சபை உறுப்பினர் - திரு. ரீ.கே. சம்பத் சிறிசான்த்த
12. கௌரவ பிரதேச சபை உறுப்பினர் - திரு. டி.எல். யுரெஸ் புஸ்பகுமார
13. கௌரவ பிரதேச சபை உறுப்பினர் - திரு. ஏ.எம்.ஏ. இசுரு சம்பத் அலகியவன்ன
14. கௌரவ பிரதேச சபை உறுப்பினர் - திருமதி. எம். சுலாரி சந்தரேகா மாகாவிட்ட
15. கௌரவ பிரதேச சபை உறுப்பினர் - திரு. மஞ்சு டயஸ் விக்கிரமனாயக்க
16. கௌரவ பிரதேச சபை உறுப்பினர் - திரு. ஏ.எப். ஜகத் சேனாரத்தின
17. கௌரவ பிரதேச சபை உறுப்பினர் - திரு. பி. நிசான்த குமார புத்தாரச்சி
18. கௌரவ பிரதேச சபை உறுப்பினர் - திருமதி. ரீ. சிறியானி ஜானகி பீரிஸ்
19. கௌரவ பிரதேச சபை உறுப்பினர் - திருமதி. இராஜரத்தினம் புவனேஸ்வரி
20. கௌரவ பிரதேச சபை உறுப்பினர் - திருமதி. எம். பிரதீபா இந்துமிணி குலரத்ன
21. கௌரவ பிரதேச சபை உறுப்பினர் - திருமதி. வெரங்ஜா காமனி விஜேரத்தின
22. கௌரவ பிரதேச சபை உறுப்பினர் - திரு. டப்ளிவ்.டப்ளிவ். மொஹான் மஞ்சுல
23. கௌரவ பிரதேச சபை உறுப்பினர் - திரு. ஆர். திசோக்
24. கௌரவ பிரதேச சபை உறுப்பினர் - திரு. கே. சான்த புஸ்பகுமார குடாவத்த
25. கௌரவ பிரதேச சபை உறுப்பினர் - திரு. டப். ஜெகன் மோஹன்
26. கௌரவ பிரதேச சபை உறுப்பினர் - திருமதி. பி. துசாரி தமயன்தி சில்வா
27. கௌரவ பிரதேச சபை உறுப்பினர் - திருமதி. எச். ஞானலதா ஹப்புதன்த்திரி
28. கௌரவ பிரதேச சபை உறுப்பினர் - திரு. எச்.எம். சரத் உஷான் மஹனாம
29. கௌரவ பிரதேச சபை உறுப்பினர் - திருமதி. டப்ளிவ்.எம். சிறியானி வீரசேகர
30. கௌரவ பிரதேச சபை உறுப்பினர் - திரு. டப். வசன்த குமாரசிறி
31. கௌரவ பிரதேச சபை உறுப்பினர் - திரு. எஸ்.ஏ. சுகத் சான்த அமரசேகர
32. கௌரவ பிரதேச சபை உறுப்பினர் - திரு. ஆர். தனேஸ் குமரன்
33. கௌரவ பிரதேச சபை உறுப்பினர் - திரு. ஜீ.கே. சுமேத லக்மால்
34. கௌரவ பிரதேச சபை உறுப்பினர் - திரு. ஜீ. இந்திக்க குமார

வருகைதந்து இருந்த அனைவரும் தமது சமய அனுட்டானங்களை பின்பற்றி, கூட்டத்திற்கு வருகைதந்து இருக்கும் கௌரவ எதிர்கட்சித் தலைவர் உட்பட ஆளும் கட்சி எதிர் கட்சி உறுப்பினர்கள் அனைவரையும், செயலாளர் மற்றும் உத்தியோகத்தர்கள் அனைவரையும் கௌரவ தலைவர் அவர்கள் வரவேற்றதுடன், உயிர் துறந்த பாதகட தித்தெனிய விஹாரையின் விஹாராதிபதிக்கு ஆழ்ந்த இரங்கல்களை தெரிவித்துக்கொண்டு பின்னர் கூட்டத்தின் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டன.

01. 2026.04.07 **பொது சபைக் கூட்ட அறிக்கை சபையில் நிறைவேற்றிக் கொள்ளல்.**

2026.04.07 ஆம் திகதி நடைபெற்ற பொது சபை கூட்ட அறிக்கையை சபையில் நிறைவேற்றுவது உகந்தது என்று கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. கே. சுசன்த பிரேமகுமார அவர்கள் பிரேரிக்க அதை கௌரவ பிரதேச சபை உறுப்பனர் திரு. ஜீ. இந்திக குமார அவர்கள் ஆமோதித்ததன் பின்னர் ஏகமனதாக சபையில் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**02. கௌரவ தலைவர் அவர்களினால் சபைக்கு முன்வைக்க வேண்டிய அறிவித்தல்கள். –**

கடந்த ஏப்ரல் 10 ஆம் திகதி பிரதேச சபையில் சிறு விழா ஒன்றில் சுகாதார பிரிவு பாராட்டப்பட்டது. புதுவருட பிறப்பை முன்னிட்டு அவர்களுக்கு உலர் உணவுப் பொதி ஒன்று வழங்கப்பட்டது, அவர்களுக்கு பரிசு வழங்கல்கள் மேற்கொள்ளப்பட்டன என்பதை தெரிவித்ததுடன், கலந்தாலோசித்ததன் பிரகாரம் இடர் முகாமை அலகை நிறுவுவது தொடர்பில் ஆலோசனை குழுவை கூட்டி ஆலோசிக்கப்பட்டதாகவும், அது தொடர்பாக சில நிறுவனங்கள் கலந்து கொண்டதாகவும், அதன் அடிப்படையில் முதலாம் கட்டமாக இதற்கு ஊழியர்கள் ஆட்சேர்ப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும் என்பதால் மரங்கள் வெட்டுதல், ஏனைய பொது விடயங்கள் தொடர்பாக திறமையான உங்கள் பிரதேசங்களில் வசிக்கும் நபர்களை அனுப்புமாறும், அந்த நபர்களுள் தகுதியுடைய நபர்களை தேர்ந்தெடுத்து, விரைவாக இது தொடர்பாக நடவடிக்கைகள் மேற்கொள்ளுமாறும், இந்த செயற்பாடுகளுக்கு தெரிவு செய்யப்படும் நபர்களுக்கு சந்தர்ப்பத்திற்கு ஏற்ற விதத்தில் கட்டணம் கொடுப்பனவு பெற்றுக்கொடுப்பதாகவும், கடந்த ஏப்ரல் 12 ஆம் திகதி அல்லது 13 ஆம் திகதி தகனசாலை காணியின் வடக்கு பக்கமாக அங்கிகரிக்கப்படாத கட்டுமாணம் ஒன்று மேற்கொள்ளப்பட்டு இருந்ததால் பிரதேச சபை தலையிட்டு அந்த கட்டுமாணத்தை உடைத்து அகற்றியதாகவும், கே.டி.யு. நிறுவனம் விளையாட்டு மைதானத்தை புனரமைப்பு செய்து பிரதேச சபைக்கு கையளிப்பது தொடர்பான கலந்துரையாடல் நடைபெற்றதாகவும், அங்கு இரண்டு சாரார்களுக்கும் இடையே ஒப்பந்தம் ஏற்பட்டதாகவும் அதனால் அவ் ஒப்பந்தம் தொடர்பில் ஆலோசணை மட்டத்தில் உள்ளதாகவும், இதற்கான காணியை லெல்லொபிட்டிய விஹாரை தருவதாகவும், அதன் அடிப்படையில் விளையாட்டு அரங்கம் உட்பட விளையாட்டு மைதானம் ஒன்றை நிர்மாணிக்கும் பணி கே.டி.யூ. நிறுவனம் பொறுப்பேற்று உள்ளது என்றும், கே.டி.யூ. நிறுவனம் நடாத்திய சிரேஸ்ட பிரஜைகள் புதுவருட களியாட்ட விழாவில் பிரதேச சபை ஊழியர்கள் நடுவர்களாக கலந்து கொண்டார்கள் என்றும், பிரேரணைகள் முன்வைக்கும் போது சட்டரீதியாக பிரதேச சபைக்கு செய்ய முடியுமான பிரேரணைகளை முன்வைக்குமாறு கௌரவ உறுப்பினர்களை கேட்டுக்கொள்வதாகவும், வார சந்தை வாகன தரிப்பிட வளாகத்தை வாகன தரிப்பிடமாக அபிவிருத்தி செய்வதாகவும் இந்த அபிவிருத்தி தொடர்பாக புரிந்துனர்விற்கு வந்துள்ளதாகவும், அந்த இடத்தில் வியாபார நிலையங்கள் நிர்மாணிக்கப்பட மாட்டாது என்றும், நகரத்தின் பொது மலசலகூடத்தை அபிவிருத்தி செய்வதற்கு 11 மில்லியன் தொகை ஒதுக்கப்பட்டு உள்ளது என்றும், அந்த தலசலகூடத்தின் வெளி மற்றும் உட்புற தோற்றங்களை மாற்றி அமைத்து புதிதாக நிர்மாணிப்பதற்கும், அதன் அடிப்படை திட்டவரைபு தயாரிக்கப்பட்டு உள்ளது என்றும், பாதகட கிணறு தொடர்பாக மீண்டும் விசாரணை மேற்கொள்ளப்படும் என்று கௌரவ சபை முன்நிலையில் தெரிவிக்கப்பட்டது.

மு.ப. 10.15 கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திருமதி. எச். ஞானலதா ஹப்புதன்த்திரி, கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. டப்ளிவ்.ஏ. கயான் புஸ்பகுமார, கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. ஏ.எப். ஜகத் சேனாரத்தின, கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. ஏ.வீ. நிர்மிக தீபால் அபேவர்தன ஆகியோர் சபைக்கு வருகை தந்தனர்.

**03. பிரதேச சபையின் பொதுச் சபைக் கூட்டத்திற்கு சமூகம் அளிக்காமை தொடர்பாக அனுமதி பெறல் சம்பந்தமான பிரேரணை**

வைத்திய காரணங்களினால் பொது சபை கூட்டத்திற்கு சமூகம் அளிக்க முடியாது என்று அறிவித்துள்ள கௌரவ பிரதேச சபை உறுப்பனர் திருமதி. மயுரி சத்துரிகா பரணமான அவர்களின் லீவு அனுமதிப்பது உகந்தது என்று கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. டி.எல். யுரெஸ் புஸ்பகுமார அவர்கள் பிரேரிக்க அதை கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. ஜீ. இந்திக்க குமார அவர்கள் ஆமோதித்தார்.

வைத்திய காரணங்களினால் பொது சபை கூட்டத்திற்கு சமூகம் அளிக்க முடியாது என்று அறிவித்துள்ள கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. ஜீ. இந்திக்க உதய குமார குணவர்தன் அவர்களின் லீவு அனுமதிப்பது உகந்தது என்று கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. எஸ்.ஏ. சுகத் சாந்த அமரசேகர அவர்கள் பிரேரிக்க அதை கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. பி. நிசான்த குமார புத்தாரச்சி அவர்கள் ஆமோதித்தார்.

கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. எம்.ஏ. புஸ்பகுமார தனசேகர சபை கூட்டத்திற்கு வருகை தராததால் அவரின் லீவு அனுமதி அளிக்கப்படவில்லை.

04. **கௌரவ சபைக்கு அனுப்பப்பட்டுள்ள நினைவுக்குறிப்புக்கள், பொதுமக்களின் புகார்கள், முறைப்பாடுகள் பொது சபைக்கு முன்வைத்தல் :-**

2026 ஆம் ஆண்டு பெல்மதுள்ள வெசக் மஹா மங்கல்ய என்ற பெயரில் ஸ்ரீ இரதனாராமய, பஹல போபிட்டிய விஹாரையின் விஹாராதிபதி சுவாமின்வஹன்சே வெசக் நிகழ்ச்சி நடவடிக்கைகளுக்காக 02 நாட்கள் வார சந்தை வாகன தரிப்பிட வளாகத்தை ஒதுக்கித் தருமாறு வேண்டுகோல் விடுத்துள்ளார் என்பதை சபைக்கு முன்வைக்கின்றேன்.

**05. உரிய முறையில் காலம் வழங்கப்பட்டு உள்ள பிணக்குகள் :- இல்லை**

**06. உரிய முறையில் காலம் வழங்கப்பட்டு உள்ள பிரேரணைகள்**

1. **கௌரவ பிரதேச சபை தலைவர் திரு. எம்.ஜீ.ஏ. தர்மசிறி மாணிபுற அவர்களின் பிரேரணைகள்**

1. 2026 ஆம் ஆண்டு பொருட்கள் கணக்கெடுப்புக்கு ஏற்ப ஏலம் விடப்பட்ட பொருட்களில் ஏலம் எடுக்காத பொருட்களை இரண்டாவது முறையாக ஏலத்தில் விடுவதற்கு கீழ் குறிப்பிடப்பட்டுள்ள கமிட்டியை நியமிப்பதற்கு பிரேரிக்கின்றேன்.

**மதிப்பீட்டு கமிட்டி**

| | |
|---|---|
| திரு. ஜீ.கே. சுமேத லக்மால் | - கௌரவ பிரதேச சபை உறுப்பினர் |
| திரு. பி. நிசான்த குமார புத்தாரச்சி | - கௌரவ பிரதேச சபை உறுப்பினர் |
| திரு. கே.டப்.எம்.எஸ்.ரீ.எஸ். ஆனந்த | - இயந்திர பெறியியலாளர் |
| திருமதி. எம்.ஜி.எஸ். மல்லிகா | - பொதுமக்கள் அபிவிருத்தி உத்தியோகத்தர் |
| திரு. ஜே.எம்.எஸ்.கே. பண்டார | - பிரதான முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் |
| திரு. பி.எம்.அயி.எஸ். யோகரத்தின | - தொழிநுட்ப உத்தியோகத்தர் |
| திருமதி. கே.எம்.என். குணரத்தின | - வருமான பரிசோதகர் |

**ஏலவிற்பனை கமிட்டி**

| | |
|---|---|
| திரு. டப்ளிவ்.ஏ. கயான் புஸ்பகுமார | - கௌரவ பிரதேச சபை உறுப்பினர் |
| திரு. ஆர். தனேஸ் குமரன் | - கௌரவ பிரதேச சபை உறுப்பினர் |
| திருமதி. எம்.ஜி.எஸ். மல்லிகா | - பொதுமக்கள் அபிவிருத்தி உத்தியோகத்தர் |
| செல்வி. எஸ். இரத்னாவதி | - அபிவிருத்தி உத்தியோகத்தர் |
| திரு. கே.ஜே. உபநந்த | - அபிவிருத்தி உத்தியோகத்தர் |
| திருமதி. டப்.எம்.ரீ. ஹர்சனீ | - அபிவிருத்தி உத்தியோகத்தர் |
| திருமதி. டப்.டி.ஆர். விஜேரத்தின | - அபிவிருத்தி உத்தியோகத்தர் |

மேற்கூறிய பிரேரணை கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. கே. சுசன்த பிரேமகுமார அவர்களினால் ஆமோதிக்கப்பட்டது.

**முடிவுகள் இலக்கம் 01**

2026 ஆம் ஆண்டு பொருட்கள் கணக்கெடுப்புக்கு ஏற்ப ஏலம் விடப்பட்ட பொருட்களில் ஏலம் எடுக்காத பொருட்களை இரண்டாவது முறையாக ஏலத்தில் விடுவதற்கு கீழ் குறிப்பிடப்பட்டுள்ள கமிட்டியை நியமிப்பது உகந்தது என்று ஏகமனதாக சபையில் நிறைவேற்றப்பட்டது.

**மதிப்பீட்டு கமிட்டி**

| | |
|---|---|
| திரு. ஜீ.கே. சுமேத லக்மால் | - கௌரவ பிரதேச சபை உறுப்பினர் |
| திரு. பி. நிசான்த குமார புத்தாரச்சி | - கௌரவ பிரதேச சபை உறுப்பினர் |
| திரு. கே.டப்.எம்.எஸ்.ரீ.எஸ். ஆனந்த | - இயந்திர பெறியியலாளர் |
| திருமதி. எம்.ஜி.எஸ். மல்லிகா | - பொதுமக்கள் அபிவிருத்தி உத்தியோகத்தர் |
| திரு. ஜே.எம்.எஸ்.கே. பண்டார | - பிரதான முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் |
| திரு. பி.எம்.அயி.எஸ். யோகரத்தின | - தொழிநுட்ப உத்தியோகத்தர் |
| திருமதி. கே.எம்.என். குணரத்தின | - வருமான பரிசோதகர் |

**ஏலவிற்பனை கமிட்டி**

| | |
|---|---|
| திரு. டப்ளிவ்.ஏ. கயான் புஸ்பகுமார | - கௌரவ பிரதேச சபை உறுப்பினர் |
| திரு. ஆர். தனேஸ் குமரன் | - கௌரவ பிரதேச சபை உறுப்பினர் |
| திருமதி. எம்.ஜி.எஸ். மல்லிகா | - பொதுமக்கள் அபிவிருத்தி உத்தியோகத்தர் |
| செல்வி. எஸ். இரத்னாவதி | - அபிவிருத்தி உத்தியோகத்தர் |
| திரு. கே.ஜே. உபநந்த | - அபிவிருத்தி உத்தியோகத்தர் |
| திருமதி. டப்.எம்.ரீ. ஹர்சனீ | - அபிவிருத்தி உத்தியோகத்தர் |
| திருமதி. டப்.டி.ஆர். விஜேரத்தின | - அபிவிருத்தி உத்தியோகத்தர் |

02. பெல்மதுள்ள பிரதேச சபையின் திறக்டர், பெகோ இயந்திரம் மற்றும் ஏனைய வாகனங்கள் பழுதுபார்ப்பதற்கு மற்றும் மரங்கள் வெட்டுவதற்கு பிரதேச ரீதியாக பதியப்பட்ட சேவை வழங்குநர்களின் பட்டியலை அனுமதி பெற்றுக்கொள்வதற்கு கௌரவ சபைக்கு முன்வைக்கின்றேன்.

மேற்கூறிய பிரேரணை கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. கே. சுசன்த பிரேமகுமார அவர்களினால் ஆமோதிக்கப்பட்டது.

**முடிவுகள் இலக்கம் 02**

பெல்மதுள்ள பிரதேச சபையின் திறக்டர், பெகோ இயந்திரம் மற்றும் ஏனைய வாகனங்கள் பழுதுபார்ப்பதற்கு மற்றும் மரங்கள் வெட்டுவதற்கு பிரதேச ரீதியாக பதியப்பட்ட சேவை வழங்குநர்களின் பட்டியலை அனுமதி வழங்குவது உகந்தது என்று ஏகமனதாக சபையில் நிறைவேற்றப்பட்டது.

03. பெல்மதுள்ள பிரதேச சபைக்கு சொந்தமான கல்லேபிட்ட தகனசாலையில் தகன கட்டணமாக கட்டுப்பாட்டுப் பிரதேசத்தினுள் ரூ. 12,000.00 மற்றும் கட்டுப்பாட்டுப் பிரதேசத்திற்கு வெளியே ரூ. 15,000.00 என்ற ரீதியில் அறவிடப்படுகிறது. தற்போது காணப்படும் எரிவாயு விலை அதிகரிப்பு காரணமாக அதே விலைக்கு தகனம் செய்வது பிரச்சினையான விடயம் என்பதால் கட்டண திருத்தம் மேற்கொள்வதற்கு அவசியம் ஏற்பட்டுள்ளதால் இது தொடர்பாக உகந்த முடிவு ஒன்று எடுப்பதற்கு கௌரவ சபைக்கு முன்வைக்கின்றேன்.

மேற்கூறிய பிரேரணை கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. கே. சுசன்த பிரேமகுமார அவர்களினால் ஆமோதிக்கப்பட்டது.

கருத்து தெரிவிக்கையில், இந்த பிரேரணை தொடர்பில் கருத்துக்கள் தெளிவுபடுத்திக் கொள்வதற்கு கௌரவ பொதுச் சபையை செயற்பாட்டுக் குழுவாக கருதவேண்டும் என்று கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. கே. சுசன்த பிரேமகுமார அவர்கள் பிரேரிக்க அதை கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. ஏ.டப். சோமரத்தின அவர்கள் ஆமோதித்தார். (மு.ப. 10.30)

மு.ப. 10.30 இற்கு கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. டி.எம். மஞ்சுல தசநாயக்க அவர்கள் சபையில் இருந்து வெளியேரினார்.

கருத்து தெரிவிக்கையில், தற்போது தகனசாலையில் லிட்ரோ கேஸ் மற்றும் இலாப் கேஸ் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. லிட்ரோ கேஸ் 10 மற்றும் இலாப் கேஸ் 20 பயன்படுத்தப்பட்டு வருகின்றன என்றும், தற்போது லிட்ரோ கேஸ் இற்கு ரூ. 20,592.00 உம் இலாப் கேஸ் இற்கு ரூ. 20,592.00 உம் விலை கூடியுள்ளது. லிட்ரோ கேஸ் ரூ. 3,500.00 இனாலும் இலாப் கேஸ் ரூ. 4,000.00 இனாலும் அதிகரித்து உள்ளன. பூதவுடல் ஒன்றை தகனம் செய்வதற்கு செலவாகும் கேஸ் அளவிற்கும் இரண்டு பூதவுடல்கள் தகனம் செய்வதற்கு செலவாகும் கேஸ் அளவிற்கும் இடையே வேறுபாடு காணப்படுகிறது ஏனெனின் இரண்டு பூதவுடல்கள் தகனம் செய்யும் போது இயந்திரம் சூடாகி இருப்பதால் கேஸ் குறைவாக செலவாகிறது என்றும், கேஸ் விலை, மின்சார விலை அதிகரித்ததன் காரணமாக இந்த செலவை தாங்குவதற்கு முடியாது என்றும், இந்த காரணத்தினால் ஏதேனும் அளவில் கட்டணம் அதிகரிக்கப்பட வேண்டும் என்றும், தற்போது அதிகமான பிரதேச சபைகள் தகன கட்டணங்களை அதிகரித்து உள்ளன என்றும், கட்டுப்பாட்டுப் பிரதேசத்திற்கு வெளியில் இருந்து வரும் தகனங்கள் குறைவு என்றும், இந்த சந்தர்ப்பத்தில் கட்டண அதிகரிப்பு மேற்கொள்வது உகந்தது என்றும், கேஸ் விலையில் ஏதேனும் குறைவுகள் ஏற்பட்டால் கட்டணங்கள் குறைப்பது மேற்கொள்ள முடியும் என்றும், பிரதேச சபையின் வருமானம் செலவு நிலமைகளை கருத்தில் கொண்டு உகந்த முடிவு ஒன்றை பெற்றுத்தருமாறு பிரதேச சபை செயலாளர் கபில ஜகத் குணதிலக அவர்கள் தெரிவித்தார்.

இது பற்றி கலந்துரையாடப்பட்டது.

கருத்து தெரிவிக்கையில், செயற்பாட்டுக் குழவை பொதுச் சபையாக கருதவேண்டும் என்று கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. கே. சுசன்த பிரேமகுமார அவர்கள் பிரேரிக்க அதை கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. ஜீ.கே. சுமேத லக்மால் அவர்கள் ஆமோதித்தார். (மு.ப. 10.40)

கருத்து தெரிவிக்கையில், மரணம் என்பது திட்டமிட்டு நடக்கும் செயல் அல்ல என்றும், அந்த சந்தர்ப்பத்தில் மனிதர்கள் இக்கட்டான சூழ்நிலைக்கு முகம்கொடுப்பதால் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் வாழும் மக்களிடம் இருந்து தற்போது அறவிடும் கட்டணத்தை அறவிட்டு நடைமுறைபடுத்துவதானால் அது மிகவும் நல்ல விடயம் என்றும், இது தொடர்பாக அவதானத்தை செலுத்துமாறு கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. ஜீ.கே. சுமேத லக்மால் அவர்கள் தெரிவித்தார்.

கருத்து தெரிவிக்கையில், இந்த பிரேரணை காலத்திற்கு உகந்தது என்றும் ஆனால் கோடீஸ்வரனாயினும் ஏழையாயினும் தாங்கிக்கொள்ள முடியாத சந்தர்ப்பமாக மரணத்தை குறப்பிடலாம் என்றும், பிரதேச சபை கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் வாழும் மக்கள் ஊதேனும் ஓர் தொகையை பிரதேச சபைக்கு செலுத்துகிறார்கள் என்றும், இந்த சந்தர்ப்பத்தில் கட்டணங்களை அதிகரிக்க வேண்டாம் என்றும், கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. இந்திக குமார அவர்களின் தந்தையின் இறுதிக் கிரியைக்காக பிரதெச சபை தலையிட்டு செய்த விடயங்களுக்காக பிரதேச சபையின் ஊழியர்கள் மற்றும் கௌரவ சபை உறுப்பினர்கள் அனைவருக்கும் கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. இந்திக குமார அவர்கள் சார்பில் நன்றிகளை தெரிவித்துக் கொள்வதாக தெரிவிக்கப்பட்டது.

கருத்து தெரிவிக்கையில், தகனசலை கட்டணம் அதிகரித்தல் தொடர்பில் கடுமையான எதிர்பை தெரிவிப்பதாகவும், ஏனென்றால் மக்கள் இந்த சந்தர்ப்பத்தில் கட்டணங்கள் அதிகரிப்பை அல்ல சலுகைகளை எதிர்பார்ப்பதாகவும், இந்த சந்தர்ப்பத்தில் ஒன்றில் ஒன்று கட்டணங்கள் அதிகரிக்கப்பட்டால் அது அவ்வளவு நல்ல விடயம் அல்ல என்றும், ஏதேனும் சந்தர்ப்பத்தில் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு தகன கட்டணங்களில் சலுகை வழங்குமாறும் நாங்கள் எடுக்காத எரிபொருள் கொடுப்பனவுகளை, தொலைபேசி கட்டண கொடுப்பனவுகளை இந்த விடயத்திற்கு ஈடுபடுத்துமாறு பிரேரித்ததாகவும், இந்த பிரேரணை மேற்கொள்ளப்பட்டது அந்த அதிகரிப்புக்களுக்கு எதிர்ப்பதால் என்றும், இந்த சந்தர்ப்பத்தில் அதிகரிப்புக்கள் மேற்கொள்ள வேண்டாம் என்றும், இது தொடர்பாக தனது எதிர்பை தெரிவிப்பதாகவும் கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. ஏ.டப். சோமரத்ன அவர்கள் தெரிவித்தார்.

கருத்து தெரிவிக்கையில், இந்த சந்தர்ப்பத்தில் உலக நிலமையை அடிப்படையாகக் கொண்டு மத்தியகிழக்கு நிலமையை அடிப்படையாகக் கொண்டும் பொருட்களில் விலைகள் அதிகரித்து உள்ளதாகவும், இந்த சந்தர்ப்பத்தில் காணப்படும் நிலமைக்கு ஏற்ப கட்டணங்கள் அதிகரிப்பு மேற்கொள்ளப்படாவிட்டால் அது பிரச்சிணைகளை ஏற்படுத்தும் என்றும், நாங்கள் பொதுமக்களை பற்றியும் சிந்திக்க வேண்டும் என்றும், கேல் விலை அதிகரிப்புக்கு ஏற்ப கட்டணங்கள் அதிகரிப்பது உகந்தது என்று தான் தெரிவிப்பதாக கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. கே. சுசன்த பிரேமகுமார அவர்கள் தெரிவித்தார்.

கருத்து தெரிவிக்கையில், பெல்மதுள்ள பிரதேச சபை கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் வாழும் மக்களிடமிருந்து அறவிடும் தகனசாலை கட்டணங்களை இந்த சந்தர்ப்பத்தில் அதிகரிக்க வேண்டாம் என்றும், கட்டுப்பாட்டுப் பிரதேசத்திற்கு வெளியில் கட்டணங்களை அதிகரிக்குமாறும், கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் கட்டணங்கள் அறவிடுவது தொடர்பில் பிறகு முடிவெடுப்பது உகந்தது என்றும், கட்டுப்பாட்டுப் பிரதேசத்திற்கு வெளியில் ரூ. 17,000.00 தெகையை தகனசாலை கட்டணமாக அறவிடுவது உகந்தது என்று கௌரவ பிரதேச சபை உபதலைவர் திரு. எச்.ஜீ. நலின் சேனக மாகம்மன அவர்கள் தெரிவித்தார்.

கருத்து தெரிவிக்கையில், கட்டுப்பாட்டுப் பிரதேசத்திற்கு வெளியில் ரூ. 17,000.00 தெகையை தகனசாலை கட்டணமாக அறவிடுவது உகந்தது என்று கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. டப்.ஏ. கயான் புஸ்பகுமார அவர்கள் தெரிவித்தார்.

கருத்து தெரிவிக்கையில், நாங்கள் பொதுமக்களுக்கு சேவை செய்யவேண்டும் என்றும், பிரதேச சபை என்ற ரீதியில் எங்கள் செலவுகளை ஈடுசெய்ய வேண்டும் என்றும், அப்படி இல்லை என்றால் தொடர்ந்து இயங்க முடியாது என்றும், ஒரு விடயம் தொடர்பாக எங்களுக்கு அதிகமாக செலவு செய்ய வேண்டி ஏற்படுமானால், அந்த செலவை ஈடுசெய்ய முடியாது என்றால் எங்களுக்கு அதை தொடர்ந்து நடத்திச் செல்ல முடியாது. சிறது காலத்திற்கு நடத்திச் செல்ல முடியும் என்றும் வருங்காலத்தில் வீழ்ச்சி அடையும் என்றும், தகனசாலையை அழகாக நடாத்திச் செல்வதற்கு, ஊழியர்களுக்கு தேவையான வசதிகளை செய்து கொடுத்தல் போன்றன குறைப்பதற்கு நேரிடும் இந்த செலவை குறைத்துக்கொள்ளாவிட்டால் வெளியில் இருந்து அறவிடும் ரூ. 15,000.00 தெகையை ரூ. 17,000.00 ஆகவும், சபை கட்டுப்பாட்டுப் பிரதேசத்தினுள் ரூ. 12,000.00 தொகை தொடர்பாக செலவுகளை கணக்கில் கொண்டு செலவுகளை ஈடுசெய்வதற்கு தேவையான தொகை வரை கட்டணங்களை அதிகரிப்பது உகந்தது என்று கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. ஆர்.எல். இந்திக கயான் லியனகே அவர்கள் தெரிவித்தார்.

கருத்து தெரிவிக்கையில், எவ்வித கட்டண அதிகரிப்புக்களுக்கும் மற்றும் அனைத்து பிரேரணைகளுக்கும் தான் எதிர்பு தெரிவிப்பதாக கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. மஞ்சு டயஸ் விக்கிரமநாயக்க அவர்கள் தெரிவித்தார்.

**முடிவுகள் இலக்கம் 03**

பெல்மதுள்ள பிரதேச சபைக்கு சொந்தமான கல்லேபிட்ட தகனசாலையில் தகன கட்டணமாக கட்டுப்பாட்டுப் பிரதேசத்தினுள் ரூ. 12,000.00 மற்றும் கட்டுப்பாட்டுப் பிரதேசத்திற்கு வெளியே ரூ. 17,000.00 தொகை அறவிடுவதற்கும், தகன சாலை கட்டணமாக கட்டுப்பாட்டுப் பிரதேசத்தினுள் ரூ. 12,000.00 கட்டணம் தொடர்பாக செலவுகளை கணக்கில் கொண்டு அந்த செலவுகளை ஈடுசெய்ய முடியுமான கட்டணம் ஒன்றை வருங்காலத்தில் முடிவு செய்வதற்கு ஏகமனதாக சபையில் நிறைவேற்றப்பட்டது.

04. 2025 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட கீழ் குறிப்பிடப்பட்டுள்ள திட்டங்களுக்கான நிதி தழுவ அனுமதியின் கீழ் செலுத்தப்பட்டது. கீழ் குறிப்பிடப்பட்டுள்ள அக் கொடுப்பனவுகள் தொடர்பாக அனுமதி பெறுவதற்கு சபைக்கு முன்வைக்கின்றேன்.

1. கிரிவெல்தெனிய விஹாரை அருகில் இருந்து (250m) தொடர்ந்து கற்கள் பாவி தார் இடுதல். - ரூ. 1,265,454.15 – எக்சத் முச்சக்கரவண்டி சங்கம், கிரிவெல்தெனிய விஹாரை சந்தி, சன்னஸ்கம
2. தொரதொட காலணி சந்தியில் இருந்து திரு. சமிந்த வீடு அருகில் இருந்து சொஹொன்பிடிய அருகில் வீதியை நிர்மாணித்தல். - ரூ. 1,692,703.64 – ஜய ஸ்ரீ பிரஜா சஹயோகிதா பதனம, நிமல் வீதி, மொரதொட, ஓபநாயக்க
3. தொபகஸ்வின்ன சர்வோதயவிற்கு செல்லும் வீதியில் இருந்து தொடர்ந்து தொபகஸ்வின்ன பாடசாலை அருகில் வீதியை கொங்கிறீட் செய்தல். - ரூ. 1,685,242.72 – யௌவன அவமங்கல்யாதார சங்கம், தொபகஸ்வின்ன, லெல்லொபிட்டிய
4. இஹல போபிட்டிய பாலுவத்த வீதியில் இருந்து தொடர்ந்து செப்பனிடுதல். - ரூ. 1,378,002.21 – எக்சத் சுப சாதக சங்கம், இஹல போபிட்டிய, பெல்மதுள்ள

மேற்கூறிய பிரேரணை கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. கே. சுசன்த பிரேமகுமார அவர்களினால் ஆமோதிக்கப்பட்டது.

**முடிவுகள் இலக்கம் 4**

மேற்கூறிய கொடுப்பனவுகள் தொடர்பில் அனுமதி வழங்குவது உகந்தது என்று ஏகமனதாக சபையில் நிறைவேற்றப்பட்டது.

05. கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. டி.எல். யுரெஸ் புஸ்பகுமார அவர்கள் குட்டபிட்டிய கிராம உத்தியோகத்தர் பிரிவில் நாரங்கொட இல. 06 கீழ் வீதியில் உள்ள பகுதி ஒன்றில் வீதி புதையுண்டு காணப்படுவதால் அவ் வீதியில் போக்குவரத்து செய்ய முடியாத நிலை உருவாகி உள்ளது என்றும், அதை விரைவாக புனரமைப்பு செய்து தருமாறு கோரி உள்ளார். அதன் அடிப்படையில் தொழிநுட்ப உத்தியோகத்தர் கள பரிசோதனை மேற்கொண்டு ரூ. 27,279.29 தொகைக்கு மதிப்பீடு தயாரித்து உள்ளார். அந்த திட்டத்தை பிரதேச சபை நிதியில் இருந்து மேற்கொள்வதற்கு அனுமதியை பெற்றுகொள்வதற்கு கௌரவ சபைக்கு முன்வைக்கின்றேன்.

மேற்கூறிய பிரேரணை கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. ஸீ. இந்திக குமார அவர்களினால் ஆமோதிக்கப்பட்டது.

கருத்து தெரிவிக்கையில், இந்த வீதியீல் புதையுண்டு இருக்கும் பகுதியை மாத்திரம் அபிவிருத்தி செய்து பொதுமக்களின் போக்குவரத்து நடவடிக்கைகளை இலகுபடுத்துவதற்கு இந்த பிரேரணையை ஏற்றுக்கொண்டதாக கௌரவ தலைவர் திரு. எம்.ஜீ.ஏ. தர்மசிறி மாணிபுற அவர்கள் தெரிவித்தார்.

**முடிவுகள் இலக்கம் 5**

கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. டி.எல். யுரெஸ் புஸ்பகுமார அவர்கள் குட்டபிட்டிய கிராம உத்தியோகத்தர் பிரிவில் நாரங்கொட இல. 06 கீழ் வீதியில் உள்ள பகுதி ஒன்றில் வீதி புதையுண்டு காணப்படுவதால் அவ் வீதியில் போக்குவரத்து செய்ய முடியாத நிலை உருவாகி உள்ளது என்றும், அதை விரைவாக புனரமைப்பு செய்து தருமாறு கோரி உள்ளார். அதன் அடிப்படையில் தொழிநுட்ப உத்தியோகத்தர் கள பரிசோதனை மேற்கொண்டு ரூ. 27,279.29 தொகைக்கு மதிப்பீடு தயாரித்து உள்ள அந்த திட்டத்தை பிரதேச சபை நிதியில் இருந்து மேற்கொள்வது உகந்தது என்று ஏகமனதாக சபையில் நிறைவேற்றப்பட்டது.

06. உள்ளூராட்சி மன்ற சேவைகள் (பொது வசதிகள்) அபிவிருத்தி திட்டத்தின் கீழ் கல்லேபிட்ட தகன சாலையின் கேஸ் களஞ்சியப்படுத்தி வைத்துள்ள அறையை பெரிதாக்குவதற்கு பிரேரிக்கப்பட்டு உள்ளது. அதற்காக தயாரிக்கப்பட்டுள்ள ரூ. 500,000.00 தொகைக்கான மதிப்பீட்டிற்கான அனுமதியை பெற்றுக்கொள்வதற்காக முன்வைக்கின்றேன்.

மேற்கூறிய பிரேரணை கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. கே. சுசன்த பிரேமகுமார அவர்களினால் ஆமோதிக்கப்பட்டது.

**முடிவுகள் இலக்கம் 06**

உள்ளூராட்சி மன்ற சேவைகள் (பொது வசதிகள்) அபிவிருத்தி திட்டத்தின் கீழ் கல்லேபிட்ட தகன சாலையின் கேஸ் களஞ்சியப்படுத்தி வைத்துள்ள அறையை பெரிதாக்குவதற்கு பிரேரிக்கப்பட்டு உள்ளது. அதற்காக தயாரிக்கப்பட்டுள்ள ரூ. 500,000.00 தொகைக்கான மதிப்பீட்டிற்கான அனுமதியை வழங்குவது உகந்தது என்று ஏகமனதாக சபையில் நிறைவேற்றப்பட்டது.

07. 2026 ஆம் ஆண்டில் உள்ளூராட்சி மன்ற சேவைகள் - திண்ம கழிவு முகாமை தலைப்பின் கீழ் கெடேதென்ன திண்ம கழிவு முகாமை நிலையத்தில் உடைந்துள்ள கூரையை திருத்தம் செய்வதற்கு ரூ. 1.92 மில்லியன் முற்பணம் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. அதற்காக தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டிற்கு சபை அனுமதியை பெற்றுக்கொள்வதற்காக பணிவுடன் முன்வைக்கின்றேன்.

மேற்கூறிய பிரேரணை கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. ஏ.வீ. நிர்மிக தீபால் அவர்களினால் ஆமோதிக்கப்பட்டது.

**முடிவுகள் இலக்கம் 07**

2026 ஆம் ஆண்டில் உள்ளூராட்சி மன்ற சேவைகள் - திண்ம கழிவு முகாமை தலைப்பின் கீழ் கெடேதென்ன திண்ம கழிவு முகாமை நிலையத்தில் உடைந்துள்ள கூரையை திருத்தம் செய்வதற்கு ரூ. 1.92 மில்லியன் முற்பணம் அனுமதி அளிக்கப்பட்டுள்ளதால் அதற்காக தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டிற்கு அனுமதியை வழங்குவது உகந்தது என்று சபையில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. ஏ.டப். சோமரத்ன அவர்களுடைய மகன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு இருப்பதால் பொது சபையில் இருந்து வெளியேறுவதற்கு முன் அவரின் பிரேரணையை (நிகழ்ச்சி நிரலில் பிரேரணை இலக்கம் 22) முன்வைப்பதற்கு கௌரவ சபையிடம் கோரியபோது சபையின் பொது இணக்கத்திற்கு அமைய அவருக்கு தனது பிரேரணையை முன்வைப்பதற்கு அனுமதி அளிக்கப்பட்டது.

22. வாகன விபத்துக்களை குறைத்துக் கொள்வதற்கு – பிரதான வீதியில் தினந்தோரும் நடக்கும் வீதி விபத்துக்களை குறைத்துக் கொள்வதற்கு தேவையான இடங்களில் CCTV கேமரா தொகுதி ஒன்றை பொருத்துவதற்கு பிரேரிக்கின்றேன்.

மேற்கூறிய பிரேரணை கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. கே. சுசன்த பிரேமகுமார அவர்களினால் ஆமோதிக்கப்பட்டது.

கருத்து தெரிவிக்கையில், சந்தர்ப்பம் வழங்கப்பட்டமைக்கு நன்றிகளை தெரிவிப்பதாகவும், இந்த பிரேரணையை முன்வைப்பதன் ஊடாக எதிர்பார்ப்பது வீதியில் ஏற்படும் வாகன விபத்துக்களை குறைத்துக் கொள்வதற்கு மாற்றீடான வழி என்ன என்று ஆலோசனை செய்ததாகவும், ஏதெனும் நடைமுறை செயல்படுத்தப்பட்டாலும் வாகன விபத்துக்கள் அதிக அளவில் நடைபெருவதாகவும், இயலுமை காணப்படுமாயின் பிரதேச சபை கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் பிரதான வீதியில் அதிக அளவிலான வாகனங்கள் பயனம் செய்கின்றன. மிகவும் ஆபத்தான முறையில் வாகனங்கள் செலுத்துவதால் பெருமதிமிக்க உயிர்கள் இழக்கப்படுகின்றன. அது போல் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தின் மக்களின் பாதுகாப்பு தொடர்பாக பாரிய அளவிலான அவதானம் காணப்படுகிறது என்றும், இந்த பிரேரணை மூலம் தான் எதிர்பார்ப்பது வியாபாரிகளின் மற்றும் ஏனையோரின் உதவிகளை பெற்றுக்கொண்டு போக்குவரத்து பொலீஸின் ஆலோசனைகளை பெற்றுக்கொண்டு மற்றும் ஏனையோரின் ஆலோசனைகள் மற்றம் அறிவுரைகள் பெற்று கேமரா தொகுதி ஒன்றை பொருத்தி அவற்றின் மூலம் தவறான வாகன செலுத்துதல்களை இணங்கண்டு விளைவுகளை ஏற்படுத்த முடியும் என்றும், இது பற்றி போக்குவரத்து பொலீஸ் உத்தியோகத்தர்களிடம் விசாரித்ததாகவும், இது ஒரு பெருமதியான பிரேரணை என்று தெரிவித்தாகவும், வீதியில் தேவையான இடங்களில் கேமரா தொகுதிகளை பொருத்தி தவறான வாகன செலுத்துதல்கள் தொடர்பாக தண்டப்பணம் அறவிடப்படும் என்று மக்களிடையே பிரசாரம் செய்ய முடியுமானால், வருங்காலத்தில் வீதி போக்குவரத்து விதிகளுக்கு ஏற்ப வாகன செலுத்தல்கள் நடைபெறும் என்ற நம்பிக்கை உள்ளது என்றும், ஆனால் பிரதேச சபை நிதியை பயன்படுத்தி இந்த செயலை செய்வதற்கு எதிர்பார்ப்பது இல்லை என்றும், வியாபாரிகளின் ஒத்துழைப்பு மற்றும் இது தொடர்பாக தெளிவுள்ள நபர்களின் ஒத்துழைப்பு பெற்றுக்கொண்டு இந்த கேமரா தொகுதியை பொருத்துவதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொண்டு வாகன விபத்துக்களை தவிர்த்துக் கொள்வதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்வது உகந்தது என்று கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. ஏ.டப். சோமரத்ன அவர்கள் தெரிவித்தார்.

சூரிய தகடுகள் பொருத்துவதற்கும் அவற்றின் உதவியுடன் மின்குமிழ் ஒன்றும் மற்றும் 02 கேமராக்கள் பொருத்துவதற்கு இயலுமை உள்ளது என்றும், அப்போது மின்சார கட்டணம் பற்றி பிரச்சனை எழாது என்றும், அந்த மின்சாரத்தின் மூலம் கேமராக்களை இயக்க முடியும் என்றும், அதற்கு பொலிஸை சம்பந்தப்படுத்தியதும் பொலிசுக்கு கேமரா தகவல்களை (தரவு) பெற்றுக்கொள்ள முடியும் என்றும், அப்போது இந்த அனைத்து நடவடிக்கைகளும் வெற்றிகரமாக செய்துமுடிக்க முடியும் என்றும், இந்த கேமராக்களை பொருத்துவதற்கு ரூ. 50,000.00 செலவாகும் என்றும், அனைவரினதும் கருத்துக்களை பெற்றுக்கொண்டு இந்த செயலை வெற்றிகரமாக செய்து முடிக்க முடியுமான இந்த பிரேரணை நடைமுறை சாத்தியமானதும் பெருமதியான பிரேரணை ஒன்று என்று கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. மஞ்சு டயஸ் விக்கிரமனாயக்க அவர்கள் தெரிவித்தார்.

மு.ப. 11.05 மணிக்கு கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. ஏ.டப். சோமரத்ன அவர்கள் பொது சபையில் இருந்து வெளியேரினார்.

**முடிவுகள் இலக்கம் 08**

இந்த பிரேரணை சரியானது என்பதால் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் வியாபாரிகள், போலிஸ், வீதி அபிவிருத்தி அதிகார சபை இது தொடர்பாக அறிவுள்ள நபர்கள் தொடர்பு படுத்தி கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. ஏ.டப். சோமரத்ன அவர்களின் தலமையின் கீழ் திட்டம் ஒன்றை தயாரிப்பது உகந்தது என்று சபையில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

08. பெல்மதுள்ள பிரதேச சபையில் கடமை புரியும் ஜே.என்.ஜீ. இலக்மின, ஆர். உதயகுமார, டப். சுமித் ஆகிய தொழிலாளர்களின் சேவை ஒப்பந்த காலத்தை 03 மாதங்களுக்கு மற்றும் கே.எச்.எல்.எஸ். விமலரத்ன, ரீ.எம்.எஸ். தென்னகோன், ரீ.வீ.பீ. இலக்மால் ஆகியோரின் சேவை ஒப்பந்த காலத்தை 01 வருடத்திற்கு நீடிப்பதற்கு பிரேரிக்கின்றேன்.

மேற்கூறிய பிரேரணை கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. கே. சுசன்த பிரேமகுமார அவர்களினால் ஆமோதிக்கப்பட்டது.

கருத்து தெரிவிக்கையில், தொழிலாளர் பிரச்சினை சரியாக செயல்படுவது இல்லை என்றும், கழிவு முகாமையின் போது அதிகளவில் தொழிலாளர்கள் வருகை தராதிருப்பது தெரிய வருவதாகவும், சில தொழிலாளர்கள் கடமை புரிவது தொடர்பாக சில பிரச்சிணைகள் ஏற்பட்டு உள்ளன என்றும், இந்த தொழிலாளர்களின் சேவை காலத்தை ஒரு மாதத்திற்கு நீடிப்பதற்கும், இவர்களின் செயல்பாடுகளை பற்றி விசாரணை செய்வதற்கு கமிட்டி ஒன்றை நியமிப்பதறகும் அந்த கமிட்டி மூலம் இது

தொடர்பாக பரிந்துரைகள் பெற்றுக்கொள்வது உகந்தது என்றும், அந்த பரிந்துரைகளுக்கு ஏற்ப அடுத்த பொதுச் சபையில் முடிவு எடுப்பது உகந்தது என்று கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. கே. சுசன்த பிரேமகுமார அவர்கள் தெரிவித்தார்.
கருத்து தெரிவிக்கையில், இந்த சாதாரண சேவை பிரிவை நீடிப்பதில் அவர்களின் சேவை முன்னேற்றம் பற்றி பகுப்பாய்வு செய்ய வேண்டும் என்றும், பொது மக்கள் பிரதிநிதிகள் அது பற்றி தேடிப்பார்ப்பது அவசியம் என்றும், ஜகத், ஆர். உதயராஜ் தொடர்பாக போதிய அளவிலாக முறைபாடுகள் இல்லை என்று கௌரவ பிரதேச சபை தலைவர் திரு. எம்.ஜீ.ஏ. தர்மசிறி மாணிபுற அவர்கள் தெரிவித்தார்.

கருத்து தெரிவிக்கையில், இந்த பிரேரணை உகந்த பிரேரணை என்பதால் வேண்டுகோல் ஒன்றை விடுப்பதாகவும், நல்ல திறமையான பொது சுகாதார வைத்திய உத்தியோகத்தர் ஒருவர் இருப்பதாகவும், தற்போது அயகம பிரதேசத்தில் கடமை புரிவதாகவும், அவர் மாரபன பிரிவில் கடமை புரிந்தவர் என்றும், அவரிடம் கழிவு முகாமை தொடர்பாக ஒரு நல்ல திட்டம் இருப்பதாகவும், அவரை தொடர்புபடுத்தி வேலைத்திட்டம் ஒன்றை மேற்கொள்வது உகந்தது என்றும், பொது சுகாதார வைத்திய உத்தியோகத்தர் திரு. பதிரண இருந்த காலத்தில் கழிவு முகாமை தொடர்பாக பிரச்சினைகள் எழவில்லை என்றும், அவரை தொடர்புபடுத்திக்கொள்ள முடியுமானால் கழிவு முகாமை நடவடிக்கைகள் வெற்றயடையும் என்று கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. மஞ்சு டயஸ் விக்கிரமநாயக்க அவர்கள் தெரிவித்தார்.

கருத்து தெரிவிக்கையில், மீண்டும் கமிட்டி ஒன்றை நியமிக்காமல் இது தொடர்பாக சுற்றாடல் கமிட்டிக்கு இது தொடர்பாக தெளிவு உள்ளதால் சுற்றாடல் கமிட்டி மூலம் இது தொடர்பாக பகுப்பாய்வு செய்வதற்கு, தேவை ஏற்படின் ஊழியர்களில் மேற்பார்வை உத்தியோகத்தர்கள், விடய உத்தியோகத்தர்கள், மற்றும் தேவை ஏற்படின் தொழிலாளர்களை வரவழைத்து சுற்றாடல் கமிட்டியின் போது அல்லது இரண்டு கம்ட்டி கூட்டங்களில் பரிந்துரைகள் பெற்றுக்கொண்டு அடுத்த பொதுச் சபை கூட்டத்தில் முன்வைப்பது உகந்நது என்று கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. ஆர்.எல். இந்திக கயான் லியனகே அவர்கள் தெரிவித்தார்.

**முடிவுகள் இலக்கம் 09**

பெல்மதுள்ள பிரதேச சபையில் கடமை புரியும் ஜே.என்.ஜீ. இலக்மிண, ஆர். உதயகுமார, டப். சுமித் ஆகிய தொழிலாளர்களின் சேவை ஒப்பந்த காலத்தை ஒரு மாதத்திற்கு நீடிப்பதற்கும், சுகாதார தொழிலாளர்களின் சேவை ஒப்பந்த காலத்தை நீடிப்பது தொடர்பில் மேற்பார்வை செய்வதற்கு சுற்றாடல் மற்றும் பொது வசதிகள் கமிட்டிக்கு முன்வைத்து அடுத்த சபை கூட்டத்திற்கு பரிந்துரைகளை முன்வைப்பது உகந்தது என்றும், மற்றும் கே.எச்.எல்.எஸ். விமலரத்ன, ரீ.எம்.எஸ். தென்னகோன், ரீ.வீ.பீ. இலக்மால் ஆகியோரின் சேவை ஒப்பந்த காலத்தை 01 வருடத்திற்கு நீடிப்பது உகந்தது என்று ஏகமனதாக சபையில் நிறைவேற்றப்பட்டது.

09. 2025 ஆண்டின் பொருள் பகுப்பாய்வின் பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தும் போது ஆவணங்களில் காணப்பட்ட பிழைகள் தொடர்பாக பிரச்சினைகள் எழுந்து உள்ளதால் அப் பிரச்சினைகளை தீர்த்துக்கொள்வதற்கு கீழ் குறிப்பிடப்பட்டுள்ள உத்தியோகத்தர்கள் மற்றும் இரண்டு பிரதேச சபை உறுப்பினர்களை நியமிப்பதற்கு பிரேரிக்கின்றேன்.

| | |
|---|---|
| திரு. ஜே.எம்.எஸ்.கே. பண்டார | - பிரதான முகாமைத்துவ வேவைஉ த்தியோகத்தர் |
| செல்வி. எஸ். இரத்னவதி மெணிகே | - அபிவிருத்தி உத்தியோகத்தர் |
| திருமதி. ஜீ.ஏ. சுதம்மிகா | - அபிவிருத்தி உத்தியோகத்தர் |
| திருமதி. எஸ்.டி.ஜே. லக்மாலி | - அபிவிருத்தி உத்தியோகத்தர் |

மேற்கூறிய பிரேரணை கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு.ஜீ. இந்திக குமார அவர்களினால் ஆமோதிக்கப்பட்டது.

மு.ப. 11.25 மணிக்கு கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. கே.பீ. சான்த புஸ்பகுமார குடாவத்த அவர்கள் பொது சபையில் இருந்து வெளியேரினார்.

இந்த கமிட்டிக்கு கௌரவ பிரதேச சபை உறுப்பினரான திரு. கே. சுசன்த பிரேமகுமார அவர்கள் தகுதியானவர் என்று கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. ஆர்.எல். இந்திக கயான் லியனகே அவர்கள் பிரேரிக்க அதை கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. ஜீ. இந்திக குமார அவர்கள் ஆமோதித்தார்.

மேலும் கௌரவ பிரதேச சபை உறுப்பினரான திரு. பி. நிசான்த குமார புத்தாரச்சி அவர்கள் தகுதியானவர் என்று கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திருமதி. பி. துசாரி தமயன்தி அவர்கள் பிரேரிக்க அதை கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திருமதி. ஞானலதா ஹப்புதான்த்ரி அவர்கள் ஆமோதித்தார்.

**முடிவுகள் இலக்கம் 10**

2025 ஆண்டின் பொருள் பகுப்பாய்வின் பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தும் போது ஆவணங்களில் காணப்பட்ட பிழைகள் தொடர்பாக பிரச்சினைகள் எழுந்து உள்ளதால் அப் பிரச்சினைகளை தீர்த்துக்கொள்வதற்கு கீழ் குறிப்பிடப்பட்டுள்ள உத்தியோகத்தர்கள் மற்றும் இரண்டு பிரதேச சபை உறுப்பினர்களை கொண்ட குழு ஒன்றை நியமிப்பது உகந்தது என்று சபையில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

10. 2025.11.12 ஆம் திகதி சபை முடிவுகள் இலக்கம் 17 இன் கீழ் பெறப்பட்ட கீழ் குறிப்பிடப்பட்டுள்ள பிரேரணையெ திருத்துதல்.

பிரதேச சபை கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் காணப்படும் முச்சக்கரவண்டிகள் நிறுத்தும் இடங்கள் என்று பெயர் குறிப்பிடப்பட்டுள்ள 37 இடங்களில் இருந்து கட்டணங்கள் அறவிடுதல் தொடர்பாக ஆவணப்படுத்தப்பட்டு உள்ள, ஆனால் சட்ட ரீதியாக வசூலித்துக்கொள்ள முடியாத ரூ. 3,834,750.00 தொகை முச்சக்கரவண்டிகள் கட்டணங்கள் ஆவணங்களில் இருந்து நீக்குவதற்கும், ஆவணங்களில் பில் செய்தல்களை நிறுத்துவது உகந்தது என்று 2025.11.12 ஆம் திகதி சபை முடிவுகள் இலக்கம் 17 இன் கீழ் நிறைவேற்றப்பட்ட பிரேரணையில் முச்சக்கரவண்டிகள் நிறுத்தும் இடங்கள் என்று பெயர் குறிப்பிடப்பட்டுள்ள இடங்கள் 37 என்று குறிப்பிடப்பட்டு இருந்தது அது 39 ஆக திருத்தப்படவேண்டும் என்று பிரேரிக்கின்றென்.

மேற்கூறிய பிரேரணை கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. கே. சுசன்த பிரேமகுமார அவர்களினால் ஆமோதிக்கப்பட்டது.

கருத்து தெரிவிக்கையில், மேற்குறிப்பிட்ட பிரேரணையில் முச்சக்கரவண்டிகள் நிறுத்தும் இடங்கள் என்று 39 இடங்கள் குறிப்பிடப்பட வேண்டும் என்றும் அங்கு குறிப்பிடப்பட்டிருக்கும் விதத்தில் ரூ. 3,834,750.00 தொகையானது ரூ. 3,952,950.00 தொகையாக மாற்றம் அடையவேண்டும் என்று கௌரவ பிரதேச சபை தலைவர் திரு. எம்.ஜீ.ஏ. தர்மசிறி மாணிபுற அவர்கள் தெரிவித்தார்.

ரூ. 3,834,750.00 தொகையானது ரூ. 3,952,950.00 தொகையாக மாற்றம் அடைந்ததன் காரணமாக மற்றும் 2025 பொருள் பகுப்பாய்வு பரிந்துரைகள் செயல்படுத்தும் போது ஆவணங்களில் காணப்பட்ட பிழைகள் தொடர்பாக தெரிந்து கொள்வதற்கு கௌரவ பொதுச் சபையை செயற்பாட்டுக் குழுவாக கருதுவது உகந்தது என்று கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. கே. சுசன்த பிரேமகுமார அவர்கள் பிரேரிக்க அதை கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. டப்.ஏ. கயான் புஸ்பகுமார அவர்கள் ஆமோதித்தார். (மு.ப. 11.30)

இது தொடர்பாக விடய உத்தியோகத்தர் சபைக்கு வரவழைக்கப்பட்டு விடயங்கள் கேட்கப்பட்டன.

மு.ப. 11.35 இற்கு கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. ஆர். திசோக் குமார் அவர்கள் சபைக்கு சமூகமளித்தார்.

செயற்பாட்டுக் குழவை பொதுச் சபையாக கருதவேண்டும் என்று கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. கே. சுசன்த பிரேமகுமார அவர்கள் பிரேரிக்க அதை கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. டப்.ஏ. கயான் புஸ்பகுமார அவர்கள் ஆமோதித்தார். (மு.ப. 11.40)

கருத்து தெரிவிக்கையில், பிரதேச சபை கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் முச்சக்கரவண்டிகள் நிறுத்தும் இடங்கள் என்று பெயர் குறிப்பிடப்பட்டுள்ள இடங்களில் இருந்து அறவிடப்படும் கட்டணங்கள் ஆவணங்களில் இருந்து நீக்குவதற்கு 2025.11.12 ஆம் திகதி சபை முடிவானது கீழ் குறிப்படப்பட்டுளது போல் திருத்தப்படல் வேண்டும். அதாவது 2025 ஆண்டு 11.12 ஆம் திகதிக்கு முச்சக்கரவண்டிகள் நிறுத்தும் இடங்கள் 39 இலிருந்து அறவிடவேண்டி இருந்த ரூ. 3,952,950.00 தொகை எங்கள் நிறுவனத்திற்கு வசூழித்துக்கொள்ள முடியாது என்பதால் அதை ஆவணங்களில் இருந்து நீக்குவது உகந்தது என்று கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. கே. சுசன்த பிரேமகுமார அவர்கள் தெரிவித்தார்.

**முடிவுகள் இலக்கம் 11**

பிரதேச சபை கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் முச்சக்கரவண்டிகள் நிறுத்தும் இடங்கள் என்று பெயர் குறிப்பிடப்பட்டுள்ள இடங்கள் 39 இல் உரிய 788 முச்சக்கரவண்டிகளில் இருந்து கட்டணங்கள் அறவிட்டுக் கொள்வதற்காக ஆவணங்களில் உள்ள, ஆனால் சட்டரீதியாக அறவிட்டுக்கொள்ள முடியாத கீழ் குறிப்பிடப்பட்டுள்ள வருடங்களுக்கு உரித்தான ரூ. 3,952,950.00 தொகையான முச்சக்கரவண்டி கட்டணங்கள் கௌரவ ஆளுநர் அவர்களின் அனுமதியுடன் ஆவணங்களில் இருந்து நீக்குவதற்கும், பில் செய்வதை நிறுத்துவதற்கும், உகந்தது என்று ஏகமனதாக சபையில் நிறைவேற்றப்பட்டது.

- 2023 ஆம் ஆண்டின் நிலுவை தொகை - ரூ.1,212,900.00
- 2024 ஆம் ஆண்டின் நிலுவை தொகை - ரூ.1,326,600.00
- 2025 ஆம் ஆண்டின் நிலுவை தொகை - ரூ.1,413,450.00
- ஆவணங்களில் இருந்து நீக்குவதற்கு உள்ள தொகை - ரூ.3,952,950.00

11. பெல்மதுள்ள பிரதேச சபை கட்டுப்பாட்டுப் பிரதேசத்தினுள் விளம்பர பலகைகள் காட்சிப்படுத்தல், ஒழுங்குபடுத்தல் மற்றும் கட்டுப்படுத்தல் தொடர்பான துணை விதிக்கு மாகாண சபை வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிப்பதற்கு அனுமதியை பெற்றுக் கொள்வதற்கு கௌரவ சபைக்கு முன்வைக்கின்றேன்.

மேற்கூறிய பிரேரணை கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. மஞ்சு டயஸ் விக்கிரமநாயக்க அவர்களினால் ஆமோதிக்கப்பட்டது.

**முடிவுகள் இலக்கம் 12**

பெல்மதுள்ள பிரதேச சபை கட்டுப்பாட்டுப் பிரதேசத்தினுள் விளம்பர பலகைகள் காட்சிப்படுத்தல், ஒழுங்குபடுத்தல் மற்றும் கட்டுப்படுத்தல் தொடர்பான துணை விதியை வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிப்பதற்கு அனுமதியை பெற்றுக் கொடுப்பது உகந்தது என்று சபையில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

12. பெல்மதுள்ள பிரதேச சபை கட்டுப்பாட்டுப் பிரதேசத்தினுள் விளம்பர பலகைகள், ஏனைய தற்காலிக கட்டமைப்புக்கள் மற்றும் அலங்காரங்கள் அமைத்து பராமரிப்பது தொடர்பான துணை விதிக்கு மாகாண சபை வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிப்பதற்கு அனுமதியை பெற்றுக் கொள்வதற்கு கௌரவ சபைக்கு முன்வைக்கின்றேன்.

மேற்கூறிய பிரேரணை கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. கே. சுசன்த பிரேமகுமார அவர்களினால் ஆமோதிக்கப்பட்டது.

**முடிவுகள் இலக்கம் 13**

பெல்மதுள்ள பிரதேச சபை கட்டுப்பாட்டுப் பிரதேசத்தினுள் விளம்பர பலகைகள், ஏனைய தற்காலிக கட்டமைப்புக்கள் மற்றும் அலங்காரங்கள் அமைத்து பராமரிப்பது தொடர்பான துணை விதியை வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிப்பதற்கு அனுமதியை பெற்றுக் கொடுப்பது உகந்தது என்று சபையில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

13. பாடசாலை வீதி, பெல்மதுள்ள விலாசத்தில் நடாத்திச் செல்லும் கழ் குறிப்படப்பட்டுள்ள இடங்கள் தொடர்பாக 2026 ஆம் ஆண்டிற்கான மதிப்பீடு, அரச மதிப்பீட்டு திணைக்களம் அனுப்பியுள்ளது.

- லொன்டர் ஒன்றை நடாத்திச் செல்லல் - திரு. பெவிலே லால் சந்திரசிறி (2001 – 2025) 24 வருடங்கள் - வருடாந்த வரி மதிப்பீடு - ரூ. 51,000.00
- வாகன சீட் குசன் செய்தல் திரு. எச்.வீ. பிரேமகுமார (2008 – 2025) 17 வருடங்கள் - வருடாந்த வரி மதிப்பீடு - ரூ. 17,000.00
- வ/ப சணச வலய அலுவலகம் - (1993 – 2025) 32 வருடங்கள் - வருடாந்த மதிப்பீடு ரூ. 28,000.00

2026 ஆம் ஆண்டில் பணம் செலுத்துவதாக இணங்கியதாகவும், இதற்கு முந்தைய வருடங்களுக்கான வாடகை தொகையை செலுத்துவதற்கு இணக்கம் தெரிவிக்க முடியாது என்று தெரிவித்து 2026.05.04 ஆம் திகதி திரு. எச்.வீ. பிரேமகுமார மற்றும் திரு. பெவிலே லால் சந்திரசிறி ஆகியோர் கடிதங்கள் முன்வைத்து உள்ளனர். இது தொடர்பாக வருங்கால நடவடிக்கைகள் மேற்கொள்வதற்கு உகந்த முடிவுகள் எடுப்பதற்கு கௌரவ சபைக்கு முன்வைக்கின்றேன்.

மேற்கூறிய பிரேரணை கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. ஜீ.கே. சுமேத லக்மால் அவர்களினால் ஆமோதிக்கப்பட்டது.

கருத்து தெரிவிக்கையில், இந்த நிறுவனங்கள் சட்டத்திற்கு முரணான விதத்தில் உள்ளன என்றும், இந்த பணத்தை பெற்றுக்கொள்வதற்கு நிறுவனம் என்ற ரீதியில் சட்டரீதியாக கட்டுப்பட்டு உள்ளோமா இல்லையா என்று தெளிவுபடுத்திக் கொள்ள வேண்டும் என்றும், அப்படி இயலுமை உள்ளது என்றால் அந்த பணத்தை கைவிடும் உரிமை பிரதேச சபைக்கு இல்லை என்றும், இந்த சிக்கலை உரிய முறையில் தீர்த்துக்கொள்ள வேண்டும் என்றும், உள்ளூராட்சிமன்ற ஆனையாளரிடம் சட்ட நிலமைகள் தொடர்பாக விசாரிக்க வேண்டும் என்று கௌரவ பிரதேச சபை தலைவர் திரு. எம்.ஜீ.ஏ. தர்மசிறி மாணிபுற அவர்கள் தெரிவித்தார்.

கருத்து தெரிவிக்கையில், ஒரேதடவையில் இந்த வியாபார நிறுவனங்களை நிறுத்தாமல் தொடர்ந்து இயங்குவதற்கு இடம் அளிப்பதற்கும், வாடகைக்கு விடல் மற்றும் அறவிடுதல் தொடர்பாக உள்ளூராட்சிமன்ற ஆனையாளரிடம் அனுமதியை பெற்றுக்கொள்வது உகந்தது என்று கௌரவ பிரதேச சபை உபதலைவர் திரு. எச்.ஜீ. நலின் சேனக மாகம்மன அவர்கள் தெரிவித்தார்.

மு.ப. 11.45 மணிக்கு கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. ஆர். தனேஸ் குமரன் அவர்கள் கௌரவ சபையில் இருந்து வெளியேரினார்.

கௌரவ பொதுச் சபையை செயற்பாட்டுக் குழுவாக கருதுவது உகந்தது என்று கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. கே. சுசன்த பிரேமகுமார அவர்கள் பிரேரிக்க அதை கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. ஏ.வீ. நிர்மிக தீபால் அவர்கள் ஆமோதித்தார். (மு.ப. 11.45)

இது தொடர்பாக விடய உத்தியோகத்தர் சபைக்கு வரவழைக்கப்பட்டு இது தொடர்பாக சிக்கல்கள் தீர்த்துக் கொள்ளப்பட்டன.

மு.ப. 11.55 மணிக்கு கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. எஸ்.ஏ. சுகத் சான்த அமரசேகர அவர்கள் கௌரவ சபையில் இருந்து வெளியேரினார்.

செயற்பாட்டுக் குழலை பொதுச் சபையாக கருதவேண்டும் என்று கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. கே. சுசன்த பிரேமகுமார அவர்கள் பிரேரிக்க அதை கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. டப்.ஏ. கயான் புஸ்பகுமார அவர்கள் ஆமோதித்தார். (பி.ப. 12.05)

**முடிவுகள் இலக்கம் 14**

வீடமைப்பு மற்றும் சமூக அபிவிருத்தி குழுவின் ஊடாக இந்த வியாபார நிலையங்கள் தொடர்பாக முறையான மேற்பார்வை அறிக்கை ஒன்றை எதிர்வரும் பொது சபை கூட்டத்திற்கு முன்வைப்பது உகந்தது என்று என்று சபையில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

14. தகனசாலை வளாகத்தின் சுற்றாடல் அலங்காரம் பொது மக்களுக்கு விரும்பத்தை தூண்டும் இடமாக அபிவிருத்தி செய்வது உகந்தது என்று பிரேரிக்கின்றேன்.

மேற்கூறிய பிரேரணை கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. ஜீ.கே. சுமேத லக்மால் அவர்களினால் ஆமோதிக்கப்பட்டது.

கருத்து தெரிவிக்கையில், இது ஒரு அத்தியவசிய விடயம் என்பதால், தகனசாலை வளாகதடதை சுற்றி மதில் ஒன்றை நிர்மாணித்து மண் நிரப்பி செப்பனிடுவதற்கும், உகந்த தகன திட்டம் ஒன்றை தயாரிப்பது உகந்தது என்று கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. பி. நிசான்த குமார புத்தாரச்சி அவர்கள் தெரிவித்தார்.

**முடிவுகள் இலக்கம் 15**

தகனசாலை வளாகத்தின் சுற்றாடலை அலங்காரம் செய்து பொது மக்களுக்கு விரும்பத்தை தூண்டும் இடமாக அபிவிருத்தி செய்வது உகந்தது என்று சபையில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

15. மின் தொழிநுட்பவியலாளர்கள், வீதி தொழிலாளர்கள், சுகாதார தொழிலாளர்கள், சாரதிகள், இயந்திரம் இயக்குபவர்கள் (JCB) தேவைகளுக்கு ஏற்ப பிரதேச சபையின் பணிகள் தொடர்ச்சியாக நடாத்திச் செல்வதற்கு நாளாந்த கூலி அடிப்படையில் வெளி பயிற்சிபெற்று மற்றும் பயிற்சி பெறாத நபர்களை பணிகளில் ஈடுபடுத்திக் கொள்வது தொடர்பில் உகந்த முடிவுகள் எடுப்பதற்கு கௌரவ சபைக்கு முன்வைக்கின்றேன்.

மேற்கூறிய பிரேரணை கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. கே. சுசன்த பிரேமகுமார அவர்களினால் ஆமோதிக்கப்பட்டது.

கருத்து தெரிவிக்கையில், வருங்காலத்தில் நியமிப்பதற்கு உள்ள அவசர இடர் குழுவை கருத்தில் கொண்டு பிரதானமாக இந்த பிரேரணையை முன்வைத்ததாகவும், அவசர இடர் குழுவிற்கு வேறு நிறுவனங்களில் இருந்து வரவழைக்கப்பட்ட போது அந் நிறுவனங்கள் தேவையான உபகரணங்களை வழங்னுவதற்கு தயாரக உள்ளதாகவும், அந்த உபகரணங்களை பயன்படுத்துவதற்கு தொழில்துறை வள்ளுனர்கள் இல்லாது போனால் எங்களுக்க சிறமங்கள் ஏற்படலாம் என்றும், JCB இயந்திரங்கள் மாத்திரம் கிடைத்தால் அவற்றிறகு இயக்குபவர்கள் தேவை என்பதால் இதுபோன்ற சேவைகளை வெளியில் இருந்து பெறுறுக்கொள்ள வேண்டி வருகிறது என்றும், இடர் முகாமை அலகிற்கு உபகாரங்களாக மற்றும் மக்கள் பிரதிநிதிகளின் மின்சார தேவைகளை பூர்த்திசெய்ய வேண்டும் என்றும், எங்கள் நிறுவனத்தில் மின் பொறியாளர் இருவர், சாரதி ஒருவர், கள மேற்பார்வையாளர் ஒருவர் இருப்பதாகவும், சில சந்தர்ப்பங்களில் வேலை உதவியாளர் ஒருவரை நியமிப்பதாகவும், இந்த பணிக்கு 06 நபர்கள் தொடர்புபடுவதாகவும், இதுவரை 600 மின்குமிழ்கள் வரை பொருத்தப்பட்டு உள்ளதாகவும், அதன் அடிப்படையில் நாள் ஒன்றுக்கு 03 மின்குமிழ்கள் வரை பொருத்தப்பட்டு உள்ளதாகவும், ஊழியர் எண்ணிக்கை மற்றும் விளைவுகளுக்கு இடையே இணக்கங்கள் காணப்படாமை தெளிவாக தெரிவமாகவும், போக்குவரத்து கூலி செலவு ஆகிறது (பெற்றோல்) என்றும், பயன்பாடு வினைத்திறன் மிக்கதா என்ற கேள்வி எழுவதாகவும், விசேடமாக மின்சார தேவை தொடர்பாக மக்கள் பிரதிநிதிகளிடம் இருந்து அதிகளவில் கோரிக்கைகள் இருப்பதாகவும், இந்த பணியில் வினைதிறன் அற்ற நிலை தென்படுவதாகவும், தான் தலைவர் என்ற ரீதியில் அனைத்து பிரதேசங்களையும் பிரதிநிதித்தவப்படுத்தும் பிரதிநிதி என்ற ரீதியில் இந்த பணி உரிய முறையில் நடைபெறுகின்றதா என்று தேடிப்பார்க்கும் பொறுப்பு உள்ளதால் பிரேரணையாக களஞ்சியத்தில் இருந்து வினியோகிக்கப்பட்டு உள்ள வீதி மின் விளக்குகள் அனைத்தும் பொருத்தப்பட்டு உள்ளனவா? பொருத்துதல் தொடர்பான அனைத்து தகவல்களும் இந்த குழுவிடம் உள்ளனவா? பொருத்தப்பட்டுள்ள எண்ணிக்கை, பொருத்தும் வேகம் தொடர்பாக ஆராய்ந்து பார்க்க வேண்டும் என்பதால் ஏதேனும் கமிட்டி ஒன்றை நியமித்து இந்த விடயங்கள் தொடர்பாக பரிந்துரைகள் முன்வைத்து செயல்பட வேண்டும் என்று கௌரவ பிரதேச சபை தலைவர் திரு. எம்.ஜீ.ஏ. தர்மசிறி மாணிபுற அவர்கள் தெரிவித்தார்.

கருத்து தெரிவிக்கையில், இடர் நிலமை பற்று ஆலோசிக்கப்பட்டதால் பெல்மதுள்ள இரத்தினபுரி பிரதேசத்திற்கு ஒவ்வொரு வருடமும் 45 நாட்கள் வெள்ள அபாய நிலை வருவதாகவும், இந்த நாட்களில் காணப்படும் மழை வீழ்ச்சி காரணமாக வெள்ள பெருக்கு நிலை ஏற்படுவதற்கு முன் ஆயத்தம் ஆக வேண்டும் என்றும், பிரதேச சபைக்கு மரம் வெட்டும் இயந்திரம் ஒன்று

பெற்றுக்கொள்வதற்கு கடச்த சபை கூட்டத்தில் பிரேரிக்கப்பட்டு உள்ளதாகவும், இந்த மழை காலங்களில் இது அத்தியவசியமான பிரேரணை ஒன்று என்றும், மின் விளக்ககள் பொருத்துதல்களில் சிறு குறைபாடுகள் இருக்குமேயானால் அது பிரச்சினையான விடயம் என்றும், அந்த பொருத்துதல்களின் எண்ணிக்கையை அதிகரிக்க தேவையாக சூழலை நாங்கள் உருவாக்கிக் கொடுக்க வேண்டும் என்றும், அவர்களுக்கு தேவையான வாகனங்கள், மின் விளக்குகள் பொருத்துவதற்கு தெவையான உபகரணங்கள் பெற்றுக் கொடுக்க வேண்டும் என்றும், உரிய வினைதிறனான சேவையை நோக்கி செல்வதற்கு மின் பொறியாளர்கள் காலை 08.30 மணிக்கு பிரதேச சபையில் இருந்து வெளியேறுவதற்கு தெவையான வசதிகயை செய்து கொடுக்க வேண்டும் என்றும், புதிய வீதி விளக்ககள் பொருத்துதல்களுக்கு மேலதிகமாக திருத்தப்படும் வீதி மின் விளக்குகளின் எண்ணிக்கை தொடர்பாகவும் பதிவுகள் பேணப்படல் வேண்டும் என்றும், கடந்த காலங்களில் மின்னல் தாக்கி வீதி மின் விளக்குகள் அதிக அளவில் பழுதடைந்து காணப்பட்டதால் வீதி மின் விளக்குகளுக்கு பியுஸ் ஒன்றை பொருத்துவது உகந்தது என்றும் மின்னல் தாக்கங்களின் போது பழுதடையாது என்று என்று கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. பி. நிசாந்த குமார புத்தாரச்சி அவர்கள் தெரிவித்தார்.

கருத்து தெரிவிக்கையில், பிரதான வீதியில் 39 வீதி மின் விளக்குகள் பொருத்தப்பட்டதாகவும், அதற்கு அடுத்த நாளில் 8 வீதி மின் விளக்குகள் பொருத்தபட்டிருப்பதாகவும், வீதி மின் விளக்குகள் பொருத்துவதற்கு செல்லுத் நபர்களுக்கு முன் ஆயத்தம் இருக்க வேண்டம் என்றும், வீதி மின் விளக்குகள் பொருத்துவதற்கு தேவையான உபகரணங்கள் அவர்கள் கொண்டு செல்ல வேண்டும் என்று கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. ஏ.எப். ஜகத் சேனாரத்தின அவர்கள் தெரிவித்தார்.

கருத்து தெரிவிக்கையில், கடந்த நிதி கமிட்டிக்கு போட்டோ கொப்பி இயந்திரத்தை பழுதுபார்ப்பதற்கான மதிப்பீடு ஒன்று முன்வைக்கப்பட்டதாகவும், அந்த விதமாக மதிப்பீடு ஒன்றை அந்த நபர் முன்வைக்கவில்லை என்றும், அப்படி இருக்கையில் அந்த உதிதியோகத்தரே வீதி மின் விளக்குகள் பொருத்துவதற்கு சேவை அவசியம் எழுந்ததன் காரணாக தொலைபேசி மூலம் தொடர்புகொண்ட போது தொடர்புபடவில்லை என்றும், சில பணிகளின் போது உரிய பங்களிப்பை தந்துள்ளார் என்றும், ஊழியர்களின் பிரச்சினைகள் காணப்படுகின்றன என்றும், சுகாதார ஊழியர்கள் அலுவலகத்தில் வேலை செய்கிறார்கள் என்றும், உரிய முறையில் பணிகள் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும் என்றும், இது தொடர்பாக கமிட்டி ஒன்றை நியமிக்க வேண்டும் என்று கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. கே. சுசன்த பிரேமகுமார அவர்கள் தெரிவித்தார்.

கருத்து தெரிவிக்கையில், போபிட்டிய தொகுதிக்கு தேவையான விதத்தில் வீதி மின் விளக்குகள் பொருத்தப்படவில்லை என்றும், 05 வீதி மின் விளக்குகளாவது வெசக் தினத்திற்கு முன் பொருத்துமாறு கௌரவ பிரதேச சபை உபதலைவர் திரு. எச்.ஜீ. நலின் சேனக மாகம்மன அவர்கள் தெரிவித்தார்.

கருத்து தெரிவிக்கையில், இந்த வீதி மின் விளக்குகள் பொருத்துவது தொடர்பாக ஆராய்வதற்கு தொழிநுட்ப சேவைகள் செயற்பாட்டுக் குழு மூலம் உரிய வேலைத்திட்டம் என்று தயாரிப்பதற்கும், அந்த பரிந்தரைகள் அடுத்த பொது சபைக்கு முன்வைப்பது உகந்தது என்று கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. ஆர்.எல். இந்திக கயான் லியனகே அவர்கள் தெரிவித்தார்.

கருத்து தெரிவிக்கையில், தொழிநுட்ப சேவைகள் செயற்பாட்டுக் குழுவிற்கு கௌரவ பிரதேச சபை உபதலைவர் அவர்களை பிரேரிப்பது உகந்தது என்று கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. மஞ்சு டயஸ் விக்கிரமநாயக்க அவர்கள் தெரிவித்தார்.

**முடிவுகள் இலக்கம் 16**

மின் தொழிநுட்பவியலாளர்கள், வீதி தொழிலாளர்கள், சுகாதார தொழிலாளர்கள், சாரதிகள், இயற்திரம் இயக்குபவர்கள் (JCB) தேவைகளுக்கு ஏற்ப பிரதேச சபையின் பணிகள் தொடர்ச்சியாக நடாத்திச் செல்வதற்கு நாளாந்த கூலி அடிப்படையில் வெளி பயிற்சிபெற்று மற்றும் பயிற்சி பெறாத நபர்களை பணிகளில் ஈடுபடுத்திக் கொள்வது உகந்தது என்றும், வீதி விளக்குகள் பிரச்சினை தொழிநுட்ப சேவைகள் செயற்பாட்டுக் குழுவின் ஊடாக உகந்த திட்டம் ஒன்றை தயாரிப்பது தொடர்பில் பரிந்துரைகள் தயாரித்து எதிர்வரும் பொது சபை கூட்டத்திற்கு அந்த பரிந்துரைகளை முன்வைப்பது உகந்தது என்று சபையில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

16. பிரதேச சபை மூலம் மேற்கொள்ளப்படும் அல்லது மேற்கொள்வதற்கு எண்ணியுள்ள விசேட திட்டங்கள் அல்லது பிரேரணைகள் நடைமுறைப்படுத்தும் போது ஒப்பந்தக்காரர்கள் மூலம் மேற்கொள்வது உகந்தது என்ற முடிவை எடுப்பதற்கு கௌரச சபைக்கு முன்வைக்கின்றேன்.

மேற்கூறிய பிரேரணை கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. கே. சுசன்த பிரேமகுமார அவர்களினால் ஆமோதிக்கப்பட்டது.

**முடிவுகள் இலக்கம் 17**

பிரதேச சபை மூலம் மேற்கொள்ளப்படும் அல்லது மேற்கொள்வதற்கு எண்ணியுள்ள விசேட திட்டங்கள் அல்லது பிரேரணைகள் நடைமுறைப்படுத்தும் போது ஒப்பந்தக்காரர்கள் மூலம் மேற்கொள்வது உகந்தது என்று சபையில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

17. பிரதேச சபை உறுப்பினர்களுக்கான நலன்புரி சங்கம் ஒன்றை ஆரம்பிப்பது உகந்தது என்று பிரேரிக்கின்றேன்.

மேற்கூறிய பிரேரணை கௌரவ பிரதேச சபை உபதலைவர் திரு. எச்.ஜீ. நலின் சேனக மாகம்மன அவர்களினால் ஆமோதிக்கப்பட்டது.

**முடிவுகள் இலக்கம் 18**

பிரதேச சபை உறுப்பினர்களுக்கான நலன்புரி நடவடிக்கைகளுக்காக பிரதேச சபை உறுப்பினர்களுக்கான நலன்புரி சங்கம் ஒன்றை ஆரம்பிப்பது உகந்தது என்று சபையில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

**ii. கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திருமதி. டப்.எம். சிறியானி வீரசேகர அவர்களின் பிரேரணைகள்**

18. 2026.02.11 ஆம் திகதி பொது சபை முடிவுகள் இலக்கம் 06 இன் கீழ் எடுக்கப்பட்ட கீழ் குறிப்பிடப்பட்ட பிரேரணையை திருத்துவதற்கு பிரேரிக்கின்றேன்.

பாதகட பொது நூலகத்தை பழுதுபாத்த சந்தர்ப்பத்தில் அகற்றப்பட்ட பழைய கூரையின் பயன்பாட்டிற்கு எடுக்கக்கூடிய அஸ்பஸ்ரல் தகடுகளை ஹேன்யாய தொம்பகஸ்வின்ன கிராம உத்தியோகத்தர் பிரிவில் வசிக்கும் திருமதி. பீ.எச். சுரன்ஜி தர்சனி என்பவரின் வீட்டின் கூரை மட்டம் வரை நிர்மாணிக்கப்பட்டு உள்ள 2 அறைகள் மற்றும் வரவேற்பு அறை என்பவற்றிற்கு வழங்குவதற்கு 2026.02.11 பொது சபை முடிவுகள் இலக்கம் 06 இன் கீழ் நிறைவேற்றப்பட்ட பிரேரணைக்கு ஏற்ப அவ் அஸ்பஸ்ரல் தகடுகளை அந்த நபர் பெற்றுக்கொள்ளாததால் வராகொடை வீதி, தொபகஸ்வின்ன, சன்னஸ்கம என்ற

விலாசத்தில் தற்போது நடாத்திச் செல்லும் சிறிய கடையின் சுவர்களை அமைப்பதற்கு அஸ்பஸ்ரல் தகடுகள் மற்றும் செங்கற்கள் விஜே சுமனபால என்ற நபருக்கு வழங்குவதற்கு பிரேரிக்கின்றேன்.

மேற்கூறிய பிரேரணை கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. ஜீ. இந்திக குமார அவர்களினால் ஆமோதிக்கப்பட்டது.

**முடிவுகள் இலக்கம் 19**

பாதகட பொது நூலகத்தை பழுதுபாத்த சந்தர்ப்பத்தில் அகற்றப்பட்ட பழைய கூரையின் பயன்பாட்டிற்கு எடுக்கக்கூடிய அஸ்பஸ்ரல் தகடுகள் மற்றும் செங்கற்கள் போன்றவற்றை வராகொடை வீதி, தொபகஸ்வின்ன, சன்னஸ்கம என்ற விலாசத்தில் தற்போது நடாத்திச் செல்லும் சிறிய கடையின் சுவர்களை அமைப்பதற்கு மற்றும் கூரை அமைப்பதற்கு அஸ்பஸ்ரல் தகடுகள் மற்றும் செங்கற்கள் விஜே சுமனபால என்ற நபருக்கு வழங்குவது உகந்தது என்று சபையில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

**ii. கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திருமதி. எம். சுலாரி சந்தரேகா அவர்களின் பிரேரணைகள்**

19. கனேகம பிரிவினுள் புதிதாக பொருத்தப்பட்ட வீதி மின் விளக்குகள் செயலற்று காணப்படுவதால் அவற்றை மீண்டும் புதிதாக பொருத்தித் தருமாறு பிரேரிக்கின்றேன்.

மேற்கூறிய பிரேரணை கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திருமதி. பி. துசாரி தமயன்தி சில்வா அவர்களினால் ஆமோதிக்கப்பட்டது.

**முடிவுகள் இலக்கம் 20**

வருங்காலத்தில் கனேகம பிரிவிற்கு வீதி மின் விளக்குகள் பொருத்துவது உகந்தது என்று சபையில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

20. மகிந்த வித்தியாலயத்திற்கு முன்னால் உள்ள வடிகால் தொகுதியில் மூடப்பட்டு உள்ள பகுதி உடைந்து உள்ளதால் அதை திருத்தித் தருமாறு உரிய பிரிவினரை தெளிவுபடுத்தித் தருமாறு பிரேரிக்கின்றேன்.

மேற்கூறிய பிரேரணை கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திருமதி. பி. துசாரி தமயன்தி சில்வா அவர்களினால் ஆமோதிக்கப்பட்டது.

**முடிவுகள் இலக்கம் 21**

மேற்கூறிய பிரேரணை தொடர்பாக நிர்வாக பொறியியலாளர் அலுவலகம் (மாகாண வீதிகள்) தெளிவுபடுத்துவது உகந்தது என்று சபையில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

21. பாடசாலை விடும்போது பாடசாலை வீதியில் காணப்படும் நெருக்கடி ஏற்படுவதற்கு காரணம் குட்டபிட்டிய பஸ் வண்டியால் ஆகும். அந்த நேரத்திற்கு பொலீஸ் உத்தியோகத்தர் ஒருவருடைய சேவையை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கைகள் எடுக்குமாறு பிரேரிக்கின்றேன்.

மேற்கூறிய பிரேரணை கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திருமதி. பி. துசாரி தமயன்தி சில்வா அவர்களினால் ஆமோதிக்கப்பட்டது.

**முடிவுகள் இலக்கம் 22**

மேற்கூறிய பிரேரணை தொடர்பாக பெல்மதுள்ள பொலீஸ் நிலையத்தை தெளிவுபடுத்துவது உகந்தது என்று சபையில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

**vi. கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. ஜீ.கே. சுமேத லக்மால் அவர்களின் பிரேரணைகள்**

23. பெரெண்டுவ கிராமிய வங்கி அருகில் உள்ள வீதியில் இருந்து பிரதான வீதிக்கு கற்கள், மணல், மண் போன்றவை கழுவப்பட்டு வருவதை தடுப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுப்பதற்கு பிரேரிக்கின்றேன்.

மேற்கூறிய பிரேரணை கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. டப்.ஏ. கயான் புஸ்பகுமார அவர்களினால் ஆமோதிக்கப்பட்டது.

**முடிவுகள் இலக்கம் 23**

களப் பரிசோதனை மேற்கொண்டு பெறப்படும் பரிந்துரைகளுக்கு ஏற்ப வருங்கால நடவடிக்கைகள் மேற்கொள்வது உகந்தது என்று சபையில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

24. லெல்லொபிட்டிய ஹெட்டிகந்த பிரதான வீதியின் இரு புறமும் உள்ள வடிகால் தொகுதி மற்றும் பெயர் பலகை பராமரிப்பது தொடர்பாக உரிய நிறுவனங்களை தெளிவுபடுத்துவதற்கு பிரேரிக்கின்றேன்.

மேற்கூறிய பிரேரணை கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. டப்.ஏ. கயான் புஸ்பகுமார அவர்களினால் ஆமோதிக்கப்பட்டது.

**முடிவுகள் இலக்கம் 24**

மேற்கூறிய பிரேரணை தொடர்பாக நிர்வாக பொறியியலாளர் அலுவலகம் (மாகாண வீதிகள்) தெளிவுபடுத்துவது உகந்தது என்று சபையில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

கருத்து தெரிவிக்கையில், தற்போது காணப்படும் மழை காரணமாக இன்று காலை பெரண்டுவ பிரதேசத்தில் வீடு ஒன்றிற்கு மண் சரிந்து விழுந்துள்ளது. அதனால் அதற்கு தேவையான உபகாரங்களை செய்து தருமாறு கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. ஜீ.கே. சுமேத லக்மால் அவர்கள் தெரிவித்தார்.

**அவசர பிரேரணைகள்**

**கௌரவ பிரதேச சபை உபதலைவர் திரு. எச்.ஜீ. நலின் சேனக மாகம்மன அவர்களின் பிரேரணைகள்**

சன்னஸ்கம மெலிபன் காமன்ட் தனியார் தொழிற்சாலைக்கு சொந்தமாக கழிவுகள் அகற்றும் வடிகால் தொகுதி உரிய முறையில் பராமரிக்காததால் அருகில் உள்ள காணிகள் மற்றும் வயல்கள் அழிவடைந்து காணப்படுகின்றன. மேலும் கழிவுகள் நிரம்பி நீர் வயல்கள் ஊடாக அனைக்கட்டுக்கு செல்கின்றன். இதனால் அனைக்கட்டு அசுத்தமாகி உள்ளது. இதற்கு முன் பல முறை இது தொடர்பாக தெளிவுபடுத்தப்பட்டு உள்ளது. அதனால் இது தொடர்பாக தேடிப்பார்த்து விரைவாக நடவடிக்கை எடுக்குமாறு பிரேரிக்கின்றேன்.

மேற்கூறிய பிரேரணை கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. மஞ்சு டயஸ் விக்கிரமநாயக்க அவர்களினால் ஆமோதிக்கப்பட்டது.

கருத்து தெரிவிக்கையில், சுகவீன நிலையில் பீடிக்கப்பட்டு இருந்த சந்தர்ப்பத்தில் உதவிகள் புரிந்த ஆளும்கட்சி எதிர்கட்சி பேதம் இன்றி அனைத்து பிரதேச சபை உறுப்பினர்களுக்கும் மற்றும் செயலாளர் உட்பட அலுவலக ஊழியர்கள் அனைவருக்கும் மனமார்ந்த நன்றிகளை தெரிவிப்பதுடன், விசேடமாக தலைவர் அவர்களின் மனிதநேய தண்மையை பாராட்டுவதாகவும், கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. மஞ்சு தசநாயக்க அவர்களின் சகோதரரான திரு. காமிணீ திசாநாயக்க அவர்களின் இறப்பு தொடர்பாக மற்றும் மாரபன ஹகமுவ திரு. இந்திக அவர்களின் தந்தையின் இறப்பு தொடர்பாக ஆழ்ந்த இரங்கலை தெரிவிப்பதாகவும், வருங்காலத்தில் ஊழியர் பணி நிரந்தரம் அரசினால் செய்யப்படும் என்றும், பிரதேச சபையில் 03 நபர்கள் விடுபடுவார்கள் என்றும், இதற்கு நாள் பிரச்சிணை பாதிப்புக்கள் ஏற்படுத்தும் என்றும், மாவட்டத்தில் இந்த பிரச்சனை இருப்பதால் பிரதேச சபைகளில் ஊழியர்களை பணி நிரந்தரம் செய்யும் போது சில மாதங்களுக்கு பாதிப்புக்கள் ஏற்படுவதால் அரசிற்கு பிரதேச சபை என்ற ரீதியில் இந்த மூவரையும் பணி நிரந்தரம் செய்யுமாறு பிரேரிப்பது உகந்தது என்று கௌரவ பிரதேச சபை உபதலைவர் திரு. எச்.ஜீ. நலின் சேனக மாகம்மன அவர்கள் தெரிவித்தார்.

**முடிவுகள் இலக்கம் 25**

பொது சுகாதார உத்தியோகத்தர் மற்றும் தொழிநுட்ப உத்தியோகத்தர் ஆகியோரின் அறிக்கைகள் பெற்றுக்கொள்வதற்கும், அதன் அடிப்படையில் வருங்கால நடவடிக்கைகள் மேற்கொள்வது உகந்தது என்று சபையில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

**07. செயற்பாட்டுக் குழுக்களின் அறிக்கைகள் முன்வைத்தல்கள் -**

2026.04.27 ஆம் திகதி நடைபெற்ற தொழிநுட்ப சேவைகள் செயற்பாட்டுக் குழுவின் கூட்ட அறிக்கை மற்றும் 2026.04.28 ஆம் திகதி நடைபெற்ற நூலக ஆலோசனை கமிட்டியின் அறிக்கைகள் சபைக்கு முன்வைக்கப்பட்டன.

கருத்து தெரிவிக்கையில், போதைப்பொருள் நிவாரண வேலைத்திட்டங்கள் தொடர்பாக 03 பாடசாலைகள் பிரேரிக்கப்பட்டு உள்ளதாகவும், பாதகட பௌத்த வித்தியாலயத்தில் 2026.06.22 ஆம் திகதி நிகழ்ச்சி நாள் மாற்றம் அடைய வேண்டும் என்று தருமாறு கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. டப்.ஏ. கயான் புஸ்பகுமார அவர்கள் தெரிவித்தார்.

கருத்து தெரிவிக்கையில், PD 7614 கெப் வண்டியில் AC திருத்துவது காலம் தாமதமாகி செல்வதால் விரையாக AC திருத்தித் தருமாறு கௌரவ பிரதேச சபை உபதலைவர் திரு. எச்.ஜீ. நலின் சேனக மாகம்மன அவர்கள் தெரிவித்தார்.

கருத்து தெரிவிக்கையில், இந்த கெப் வண்டியில் AC திருத்துவது தொடர்பாக இரண்டாவது தொழிநுட்ப சேவைகள் செயற்பாட்டுக் குழுவிற்கு பிரேரணை கொண்டு வந்ததாகவும், அந்த சந்தர்ப்பத்தில் உரிய தகவல்கள் கிடைக்கப்பெறாத காரணத்தினால் பரிந்துரைகள் வழங்குவதற்கு முடியாமல் போனது என்றும், உரிய முறையில் பிரேரணை முன்வைக்குமாறு உத்தியோகத்தர்களை தெளிவுபடுத்தியதாகவும், கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. ஏ.எம்.ஏ. இசுரு சம்பத் அலகியவன்ன அவர்கள் தெரிவித்தார்.

கருத்து தெரிவிக்கையில், அனைத்து கமிட்டிகளுக்கும் ஆளும் கட்சி, எதிர்கட்சி உறுப்பினர்கள் அந்த சந்தர்ப்பத்தில் கலந்து கொள்ளுமாறு கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. ஆர்.எல். இந்திக கயான் லியனகே அவர்கள் தெரிவித்தார்.

2025.04.30 ஆம் திகதி நடைபெற்ற கொள்முதல் கமிட்டி அறிக்கை கௌரவ சபைக்கு முன்வைக்கப்பட்டது.

அதன் அடிப்படையில் இலக்கம் 14 கொண்ட மீன் கடை அறை டென்டர் விடுவது தொடர்பாக கூடுதலான தொகையை அம்பலன்தெனிய, நிவிதிகலை என்ற முகவரியில் வசிக்கும் திரு. ஜீ.டி.எம்.பீ. கருணாரத்ன என்பவர் (ரூ. 2,650,000.00) முன்வைத்து உள்ளார் என்று என்று கௌரவ பிரதேச சபை தலைவர் திரு. எம்.ஜி.ஏ. தர்மசிறி மாணிபுற அவர்கள் தெரிவித்தார்.

**08. பெறுவனவுகள் மற்றும் செலவுகள் பற்றிய மாதாந்த அறிக்கை, திரட்டப்பட்ட மாதாந்த வருமானம் பற்றிய மேம்பாட்டு அறிக்கை கௌரவ சபைக்கு முன்வைத்தல்**

2026.03.01 ஆம் திகதியில் இருந்து 2026.03.31 ஆம் தகதி வரையிலான மாதத்திற்கு உரிய பிரதேச சபையின் கொடுப்பனவு அறிக்கை அனுமதி வழங்கல் மற்றும் பெறுவனவுகள் மற்றும் செலவுகள் பற்றிய மாதாந்த அறிக்கை, திரட்டப்பட்ட மாதாந்த வருமானம் பற்றிய மேம்பாட்டு அறிக்கை என்பன சபைக்கு முன்வைக்கப்பட்டன.

வேறு விடங்கள்

- பிரதேச சபை உறுப்பினர்களின் பிரத்தியோக தெளிவுபடுத்தல்கள்
- பிரதேச சபைத் தலைவரின் நன்றியுரை

இன்று பிரதேச சபைக் கூட்டத்திற்கு வருகை தந்திருக்கும் கௌரவ எதிர்கட்சித் தலைவர் உட்பட பிரதேச சபை உறுப்பினர்கள் மற்றும் செயலாளர் உட்பட அலுவலக உத்தியோகத்தர்கள் அனைவருக்கும் மனமார்ந்த நன்றிகளை தெரிவித்து கௌரவ தலைவர் தனது நன்றி உரையை முடித்துக் கொண்டார்.

பி.ப. 01.10 மணி அளவில் சபைக் கூட்டம் முடிவடைந்தது.

தலைவர்
பிரதேச சபை
பெல்மதுள்ள